# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **374/2016**

ஆணை எண். **135/2016**

நாள் : **02/08/2016**

திரு. எம். பாலமுருகன்,
44 ஏ/1 கோவலன் நகர் பிரதான சாலை,
மதுரை –625 003

**– முறையீட்டு மனுதாரர்**

ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

**– எதிர் மனுதாரர்**

மதுரை மாநகராட்சி, கோவலன் நகர் பிரதான சாலையில் வசிக்கும் திரு. எம் பாலமுருகன் அவர்களது 04.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு 04.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 374/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மனுதாரர் திரு. எம். பாலமுருகன் அவர்கள் மதுரை மாநகராட்சியில் உதவிப் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார். மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், பணிமூப்பில் தனக்கும் இளையவரான திரு. அரசு என்பவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும் தன்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையை இரத்து செய்து பதவி உயர்வு வழங்குமாறு மனுதாரர் முறையிட்டுள்ளார். தன்மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுதாரர் வழக்கு தொடர்ந்ததை அடுத்து துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கையினை ஆறுமாத காலத்திற்குள் முடிவுக்கு கொண்டுவருமாறு 30.04.2015 நாளிட்ட தீர்ப்பில் உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இறுதி ஆணை எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பதவி உயர்வு வழங்குவது சம்பந்தமாக மனுதாரரால் தொடரப்பட்ட வேறு ஒரு வழக்கும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ளது.

மனுதாரர் தன்மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை இரத்து செய்து பதவி உயவு வழங்கக் கோரி முறையீடு செய்துள்ளார். 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், குற்றம் இழைத்த ஒரு உள்ளாட்சி அமைப்பின் பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரிக்கு பரிந்துரைக்க இயலுமேயொழிய, தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை இரத்து செய்ய இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிட இயலாது. மேலும் மேற்படி சட்டத்தின், சட்டப்பிரிவு 10 (3)–ல் குறிப்பிட்டுள்ளபடி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் விசாரிக்கலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பதவி உயர்வு வழங்குவதற்கான மனுதாரரின் கோரிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலாது . மனுதாரர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆறுமாத காலத்திற்குள் இறுதி ஆணை வழங்குமாறு உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. எனவே இனியும் காலம் தாழ்த்தாமல் ஒழுங்கு நடவடிக்கை குறித்த நேர்வில் விரைவில் இறுதி ஆணை வழங்க அறிவுறுத்தலாம் எனத் தெரிவித்து இக்கோப்பின் மீதான மேல்நடவடிக்கையை முடித்து வைத்து ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

திரு. எம். [illegible],
உதவிப் பொறியாளர்,
44 ஏ/1 கோவலன் நகர் பிரதான சாலை,
மதுரை –625 003.

ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.